பாலாற்றின் கரையோடு ஒரு வடி கிணறு தோண்டி அதன் மூலம் மேற்படி கிராமத்திற்குக்குடி தண்ணீர்த் திட்டம் அமைத்து குடிநீர் வழங்க முடிவு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா அணைக்கட்டு கிராமம் பற்றியது. திரு. மு. ஆறுமுகம்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, அணைக்கட்டுத் தொகுதியில் மட்டும் அப்படி இல்லை. பொதுவாகத் தமிழ்நாட்டிலே தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. (மணியடிக்கப்பட்டது)

## அரசு வாகனங்களுக்கு டீசல் இயந்திரங்கள்

* வினா எண் 92—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு அலுவலகங்களில் உபயோகப் படுத்தும் ஜீப், அம்பாஸிடர் வாகனங்களுக்குச் சிக்கன நடவடிக்கையாக டீசல் இயந்திரங்கள் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம். 10 பெட்ரோல் ஜீப்களை, டீசல் வாகனங்களாகச் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மாற்றுவதற்கான முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான உத்தரவை அரசு 9-8-78-ல் பிறப்பித்துள்ளது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, அந்தத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், தாலுகா அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா? அதேபோல், பெட்ரோல் டார்கட் இன்டார்டியூஸ் செய்து இருக்கிறார்கள். அதை இன்கிரீஸ் செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, பெட்ரோலின் விலை உயர்வு காரணமாக டீசல் பயன்படுத்த ஜீப்புகள், அம்பாசிடர் போன்ற அரசு வாகனங்களைக் கொண்டு வருவதால் அதிகச் சிக்கனச் செலவு ஏற்படும் என்ற அடிப்படையில்தான் முதல் படியாக ஆய்வின் அடிப்படையில் 10 ஜீப்புகளை டீசலுக்கு மாற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதனுடைய செயல்முறையைப் பார்த்துப் பின்னர் மற்ற ஜீப்புகளையும் டீசலாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 10 மணிக்குள் முடிக்க வேண்டும். இல்லையென்றால், நான் மீதியுள்ளவற்றை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடச் சொல்லும் நிலைமை ஏற்படும்.

1978 செப்டம்பர் 8]

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, சில கட்டுப்பாடு களுக்கு உட்பட்டு அந்தத் திட்டம் கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். அது என்ன கட்டுப்பாடு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, குறைந்தது அந்த பெட்ரோலில் இருந்து டீசலாக மாற்றப்படு வதற்கு எடுத்துக்கொள்ளப்படுகிற ஜீப்புகள் எல்லாம் மேற் கொண்டு 6 ஆண்டுக் காலத்திற்கு ப்பயன் அளிக்கக்கூடிய தரத்தில் இருக்க வேண்டும் என்பது முக்கியமான கட்டுப்பாடு ஆகும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள ஜீப்கள் அடிக்கடி ரிப்பேர் ஆகி, பழுது பார்ப் பதற்காக ஒர்க்ஷாப்புக்கு அனுப்பப்படுகின்றபோது மாதக்கணக் கில் அங்கேயே நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனால் யூனியன் பகுதிகளில் செய்யப்பட வேண்டிய வேலைகளைக் கவனிப் பதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தத் தாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அரசு பராமரிப்புத் தொழில் பேட்டைகள் மிகக்குறைவாக இருந்ததால் காலதாமதம் இதுவரை இருந்தது. மேற்கொண்டு 5 இடங்களில் பராமரிப்புத் தொழில் பேட்டைகளை அரசு அமைத்திருக்கிறது. அவை எல்லாம் நடைமுறைக்கு வந்தவுடன் இந்தக் காலதாமதம் தவிர்க்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, டீசல் எஞ்சினாக மாற்றினால் அந்த எஞ்சின் சீக்கிரம் பழுதாகிவிடுகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அப்படிப்பட்ட ஜீப் களுக்கு 'மெட்டடோ ஃபோர் சிலிண்டர் எஞ்சின்களை' போட்டால் அத்தகைய சிக்கல் இல்லை என்று கூறப்படுகிறது.

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஜீப்கள் ரிப்பேர் ஆகி அல்லது 'கண்டம்டு' நிலையில் பல்லாண்டுகளாக ஏலம் விடப்படாமல் நிறுத்தி வைக்கப் பட்டு, மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஜீப்களை உடனடியாக ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் எங்கு அப்படிப் பல்லாண்டுக் காலமாக ஏலம் விடாமல் ஜீப்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்று சுட்டிக் காட்டினால் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, பெட்ரோலில் ஓடக்கூடிய ஜீப் ஒன்றை டீசலில் ஓடக்கூடிய ஜீப்பாக மாற்றுவதற்கு எவ்வளவு செலவாகிறது? டீசலில் ஓடக்கூடிய எஞ்சின் உள்ள ஜீப்பை விலைக்கு வாங்கினல் எவ்வளவு கூடுதல் தொகை ஆகும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : குறைந்தபட்சம் 18,000 ரூபாயிலிருந்து 23,000 ரூபாய் வரை ஆகும். அதைவிட எவ்வளவு சிக்கனமான முறையில் செயல்படுத்த முடியும் என்பது பற்றிய ஆய்வு நடந்து வருகிறது.

## ஆரணி—பெங்களூர் விரைவுப் பேருந்துப் பணி

* வின எண் 93—திரு. வீ. அர்ச்சுனன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

ஆரணிக்கும் பெங்களூருக்கும் இடையே விரைவுப் பேருந்துப் பணியினைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

## கெலமங்கலம், தளி பகுதிகளுக்குச் சிறப்புத் திட்டம்

* வின எண் 94—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டம், கெலமங்கலம், தளி ஆகிய பகுதியைத் தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்ய மத்திய அரசு ரூபாய் ஒரு கோடித் திட்டம் தீட்டியுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) எப்போது முதல் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ), (ஆ) கெலமங்கலம் தளி ஆகிய பகுதிகள் உள்ளிட்ட தர்மபுரி மாவட்டத்தில் (முழுவதும்) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தினை ரூ. 103.19 லட்சம் செலவில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு சிபாரிசு செய்தது. மேற்படித் திட்டத்தை ரூ. 69.665 லட்சம் செலவில் செயல்படுத்த 23-3-1978-ல் இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டம் தர்மபுரி மாவட்ட மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இவ்வாண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.